**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.463** **நாள்: 24.12.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற மாவட்ட சுகாதாரப் பேரவைக் கூட்டத்தில் மாநகராட்சியின் 19 மருத்துவமனைகளுக்கு ரூபாய் 89.72 இலட்சம் மதிப்பிலான மருத்துவ கருவிகளை வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரம் மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் சார்பில் மாவட்ட சுகாதாரப் பேரவைக் கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் இன்று (24.12.2025) தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மாநகராட்சியின் 16 நகர சமுதாய நல மையம் மற்றும் 24 மணி நேரமும் இயங்கும் 3 மகப்பேறு மருத்துவமனைகளில் உள்ள அறுவை அரங்குகளுக்கு கிருமிகளிடமிருந்து பாதுகாத்திட தூய்மைப்படுத்தும் கருவி, மகப்பேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அவசர காலங்களில் அனுமதிக்கப்படும் இதய துடிப்பு குறைபாடு உள்ளவர்களை மாரடைப்பில் இருந்து காக்க இதயத் துடிப்பை சீராக்கும் கருவி (Biphasic Defibrillator) மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளுக்கு வரும் கர்ப்பிணித் தாய்மார்களின் கர்ப்பம் மற்றும் பிரசவத்தின்போது குழந்தைகளின் இதயத் துடிப்பு, தாயின் கருப்பை சுருக்கங்களை கண்டறிந்து சரிபார்க்க தேவைப்படும் Continuous Cardiotocography CTG கருவி என ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தலா 3 கருவிகள் என 19 மருத்துவமனைகளுக்கு ரூபாய் 89.73 இலட்சம் மதிப்பிலான மருத்துவக் கருவிகளை வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் அவர்கள் பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மக்கள் நலவாழ்விற்காக பல்வேறு சுகாதாரத் திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மருத்துவமனைகளில் சிறப்பான உட்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற மாவட்ட சுகாதார பேரவைக் கூட்டத்தில் தெரிவித்த ஆலோசனையின்படி, நாய்களைக் கட்டுப்படுத்திட நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், மக்கள் நலவாழ்விற்கான சேகைளும் மேம்படுத்தப்பட்டுள்ளது. மழைகாலத்தினை முன்னிட்டு, கொசுக்கள் உற்பத்தியினை கட்டுப்படுத்தும் விதமாக கொசு ஒழிப்புப் புகை பரப்புதல் நீர் நிலைகளில் கொசு ஒழிப்பு மருந்து தெளித்தல் உள்ளிட்ட தொடர்புடைய பணிகள்

தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது நடைபெறும் மாவட்ட சுகாதாரப் பேரவைக் கூட்டத்தில் வழங்கப்படும் ஆலோசனைகள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பேசினார்.

இதனைத் தொடர்ந்து, தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 5.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் துணை செவிலியர் பயிற்சி கட்டடப் பணிகளை மாண்புமிகு மேயர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜே.எபினேசர், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் திரு. நேதாஜி யு. கணேசன், மாநகர நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், கூடுதல் மாநகர நல அலுவலர் டாக்டர் லட்சுமி தேவி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி பவித்ரா, திருமதி புனிதவதி எத்திராஜன், திருமதி பூர்ணிமா, திருமதி ரேணுகா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**